## கொடைக்கானல் நகராட்சி

2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் நாள் (31.08.2020) திங்கட் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (**ME.1**) துறையின், 21.09.2011ம் தேதிய அரசாணை (பல்வகை) எண். 145ன்படி, கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு சிறப்பு நிலை நகராட்சியால் 2020 – 2021ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய பங்குத் தொகை ரூ. 1,50,000/–ஐ (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலுத்தக் கோரி இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்.276/2020/அ2, நாள்.18.08.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பங்குத் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **878, நாள். 31.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சி சார்பாக கோடை விழா 2019 ஆம் ஆண்டிற்காக வருகை புரிந்த அமைச்சர்களை வரவேற்று வரவேற்பு பலகைகள் மற்றும் அலுவலகத்திற்கு மின் விளக்கு தோரணங்கள் போன்ற விழா ஏற்பாடுகள் செய்ய முன்பணமாக தொகை ரூ. 75000/– இந்நகராட்சி பணி ஆய்வாளர் திரு கு. சரவணன் அவர்கள் பெற்ற தொகைக்கு பணி முடிவுற்றதற்கான செலவினப் பட்டியல் சமர்ப்பித்து தொகையினை ஈடு செய்திட கோரியுள்ளார். கோடை விழா 2019 க்கான செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும், முன்பணம் ஈடு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **879, நாள். 31.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சிக்கு புதியதாக வாங்கப்பட்ட பொலிரோ வாகனத்தின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு கூடுதல் பாதுகாப்பு வசதிகள், முகப்பு விளக்கு, பம்பர் போன்றவை அமைத்திட முன் பணம் ரூ. 1,30,000/– இந்நகராட்சி பணி ஆய்வர், திரு கு. சரவணன் அவர்கள் பெற்று பணி முடித்து சமர்ப்பிக்கப்பட்ட, பட்டியல்களில் கண்ட தொகையை முன்பணத் தொகையில் ஈடு செய்து கொள்ளுமாறு தெரிவித்து விண்ணப்பித்துள்ளார். புதிய வாகனத்தின் பாதுகாப்பு நடவடிக்கை கருதி கூடுதல் பணிகள் பொது நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும், மற்றும் முன்பணம் ஈடு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **880, நாள். 31.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கொய்யாப்பாறை மற்றும் சத்யா நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பொருட்டு ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆழ்துளை கிணறுகள் மூலம் கொய்யாப்பாறை மற்றும் சத்யா நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய மின் மோட்டார் மற்றும் பகிர்மான குழாய்கள் 1200 மீட்டர் நீளத்திற்கு அமைத்திட ரூ. 7.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கும், செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **881, நாள். 31.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான செண்பகனூர் அய்யர்கிணறு பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆழ் துளை கிணறு மூலம் மூன்று இடங்களில் தண்ணீர் தொட்டி ( சின்டெக்ஸ்) அமைத்து பகிர்மான குழாய்களை விஸ்தரிப்பு செய்து இப்பகுதி மக்களுக்கு நிரந்தர குடிநீர் விநியோகம் செய்திட ரூ. 6.85 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கும், செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **882, நாள். 31.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்களில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது. உரக்கிடங்கில் அடிக்கடி காட்டுத் தீ விபத்து ஏற்படுவதினால் உடனுக்குடன் தீயை அணைத்திட ஆழ்துளை கிணற்றில் இருந்து குழாய்கள் அமைத்திடவும், அதற்கு தேவையான உதிரி பொருட்கள் பொருத்திடவும் ரூ.2.51 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கும், செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **883, நாள். 31.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி TN 57 AY 9358க்கு **30.09.2020** வரை சாலை வரி தொகை ரூ.**3596/–** இந்நகராட்சி பணி ஆய்வர் திருமதி.பவித்ரா அவர்களால் செலுத்தப்பட்டு பட்டியல் சமர்ப்பித்துள்ளார். ( Transaction / Receipt No. TN200819V6310230 / TN200819C3616690, Dated. 19.08.2020) இத்தொகையினை அன்னாருக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **884, நாள். 31.08.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.